# Copy of Deposition

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண்.65/2018**

**வாதி தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: பரமசிவம் (வா.சா.1) | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ம் நாள் செவ்வாய்கிழமை வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 முதல் விசாரணை:-**

வா.சா.1 ஆகிய நான் இந்த அசல் வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

1) 07.10.2009ம் தேதியிட்ட பாகக்கறார் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2) 13.01.1901ம் தேதியிட்ட ஈடுகடன் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**ஆகவும்,

3) 18.04.1923ம் தேதியிட்ட கந்தாய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4) 29.10.2018ம் தேதியிட்ட ஈரோடு மாவட்ட பதிவாளர் அவர்களின் செயல்முறைகள் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்து கொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன். வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

sd/(G.Pandiarajan)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.